# மண்முனை மேற்கு பிரதேச சபை
# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 18 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மண்முனை மேற்குப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மண்முனை மேற்குப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 4,125,067 ஆகும்.

#### 1.3.2 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள, விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 2.14.1 | மூடிய கேள்விகளின்றி ஒரு வியாபார நிலைய நிர்மாண வேலைகள் ரூபா 1,252,889 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 3.9.1 | கொள்வனவு வழிகாட்டிக்கு முரணாக ரூபா 1,320,000 பெறுமதியில் 07 சனசமூக நிலையங்களின் சிவில் வேலைகள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிகள் அதிகாரச் சட்டம் | ஊதியங்களிலிருந்து ரூபா 725 தொகையான முத்திரை வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் இல. 138 | பொறுப்புள்ள ஒரு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின்றி ரூபா 1,956 தொகையான மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | நிதிப்பிரமாணம் இல. 396 | 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,765 தொகையான மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவு | உரிய அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்திற்காக ரூபா 7,430 தொகை நன்கொடையாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,729,367 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,063,109 ஆக இருநதது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 739 | 808 | 16 | - | - | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 101 | 101 | - | 1,089 | 1,222 | 85 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 141 | 141 | - | 156 | 156 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 4,452 | 4,452 | - | 6,922 | 6,922 | 3 |

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 7,048 | 6,285 | 763 | 7,443 | 5,563 | 1,880 |
| ஏனையவை | 535 | 309 | 226 | 610 | 1,405 | (795) |
| உப மொத்தம் | 7,583 | 6,594 | 989 | 8,053 | 6,968 | 1,085 |
| மூலதனச் செலவினம் | 1,367 | 881 | 486 | 992 | 2,040 | (1,048) |
| முழு மொத்தம் | 8,950 | 7,475 | 1,475 | 9,045 | 9,008 | 37 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியினர்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| புதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 09 | 08 |
| ஆரம்பத் தரங்கள் | 17 | 15 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 02 |
| | 27 | 26 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 3,087,560 ஆகும்.

### 2.5.2 பயன்படுத்தாமல் மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

ரூபா 700,000 பெறுமதியான காணி, கட்டிடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 02 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தாமல் அல்லது குறைவாகப் பயன்படுதப்பட்டு இருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.5.3 அசையாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ஆண்டுகளுக்கு மேலாக அசையாத இருப்புக்கள் (பயன்படுத்தாத) ரூபா 3,343 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிர்வாகம்